**பொல்கஹவல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்கஹவல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொல்கஹவல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சபைக்கு கையகப்படுத்தப்பட்ட ரூபா 19,856,041 பெறுமதியான 20 காணித்துண்டுகள் மற்றும் ரூபா 64,314,679 பெறுமதியான 09 கட்டிட நிர்மாணங்கள் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | காணி மற்றும் கட்டிடம் மூலதனமாக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளின் பிரகாரம் பெறுமதி மற்றும் அன்மித்த அறிக்கைகளின் பெறுமதி ரூபா 1,060,522 ஆன தொகை வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், மீதிகளின் வேறுபாடு தொடர்பில் இணக்கம் செய்து சீராக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இவ்வேறுபாடு கண்டறியப்பட்டு சீர்செய்ய நடவடிக்கை எடுபபேன். | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்து சீர்செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு நிதிப்பிரமாணம் 571(3) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 5,622,578 ஆன 210 வைப்புக்கள் அரச வருமானத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ரூபா 5,622,578 பெறுமதியான 02 வருடங்களை விஞ்சிய வைப்புத் தொகையை வருமானத்திற்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,057,501 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 8,851,966 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து 14 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை ரூபா 1,192,709 தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | சில கடைகள் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இணக்கச் சபைக்கு சமர்ப்பித்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சில கடைகளில் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவைத் தொகைகள் உரியகாலத்தில் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் மாகாணசபை பிரதான செயளாலர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,760,000 மற்றும் முத்திரை வரி ரூபா 53,407,208 ஆன தொகையும் பெறவேண்டியதாக அவதானிக்கப்பட்டது. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெறவேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பேன். | இத்தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயலாற்றல்

#### (அ) நிதி ஒதுக்கீடு திட்டமிடாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு பாதீடு செய்யப்படாத 81 கைத்தொழில்கள் தொடர்பாக சபை நிதியத்தினால் ரூபா 25,122,663 தொகை செலவீடு செய்து முற்றாக பூரணப்படுத்தப்பட்டிருந்தது. | முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய முன்மொழிவுகளை நிறைவேற்ற 2020 ஆம் ஆண்டு பாதீடு செய்யப்பட்ட சபிரி கமக் வேலைத்திட்டத்தின் கீழ் அந்த முன்மொழிவுகள் அநேகமாக செயற்படுத் தப்பட்டுள்ளது. | பாதீடு செய்யப்பட்ட முன்மொழிவுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

#### (ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் கழிவு வேறாக்கல் தொகுதி நிறுவப்பட்டிருந்தும், உடனடியாக கொண்டு வரப்படும் கழிவுகள் திறந்த வெளியில் குவிக்கப்பட்டிருந்தன. உடனடியாக சேகரிக்கப்படும் உக்காத திண்மக்கழிவுகள் அந்த இடத்தைச் சுற்றிலும் குவிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டினுள் உருவாக்கப்பட்ட 1,070 தொன் இனால் 4,500 கிலோ கிராம் கொம்போஸ்ட் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 3,690 கிலோ கிராம் பசளை விற்பனை செய்யப்பட்டு ரூபா 34,560 தொகை வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. வருடத்தினுள் உக்காத பசளை 41,605 டொன் உருவாகியிருந்ததுடன் அது தொடர்பாக முகாமையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக கொண்டு வரப்படும் உக்கலடையும் கழிவுகள் 03,04 நாட்கள் திறந்த வெளியில் வைக்கப்பட்டு பின்னர் வேறாக்கல் தொகுதியில் தட்டடிக்கப்படுவதனூடாக இழையான் பரவுதல் குறைந்தளவில் காணப்படுகின்றது. வேறாக்கல் தொகுதி போதிய இடவசதிகள் இல்லாததுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் திறந்த வெளியில் உக்கலடையும் கழிவுகள் குவிக்கப்படுகின்றது. போப்கட் இயந்திரம் பழுதடைந்திருந்ததுடன் ப்ரேல் செய்யப்பட்ட பொலிதீன் களஞ்சியசலைக்கு கொண்டுசெல்ல முடியாததனால் குவிக்கப்பட்டிருந்தது. | உக்கலடையும் மற்றும் உக்கலடையாத குப்பைகள் முறையாக முகாமை செய்யப்படல் வேண்டும். |

**3.2 செயலற்ற மற்றும் குறைபயன்பாடுடைய ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டு அச்சுக்கல் செயல் திட்டம் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 1,397,152 தொகை பெறுமதியான அச்சுக்கல் வெட்டும் 04 இயந்திரங்கள் 2020 ஆம் ஆண்டு பயன்படுத்தப்படாது சபை வளாகத்தில் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் குட்டிக்கல் வெட்டும் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். | சபைக்குரிய சொத்துக்களை பயன்படுத்தப்படல் வேண்டும். |